பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 17 சனிக்கிழமை (30-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 125

# வடக்கில் தாக்குதல் சரியான நேரத்தில்!

## அமைச்சர் அனுருத்த தகவல்

கொழும்பு, மார்ச் 30

வடபகுதி மீதான அடுத்த பெரிய தாக்குதல் சரியான நேரத்தில் ஆரம்பிக்கப்படும். அந்தத் தாக்குதல் நடவடிக்கை எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து நன்கு திட்டமிடப்பட்டுள்ளது, விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே அந்த இராணுவ நடவடிக்கை அமையும்,

இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கிறார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த.

முதலில் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டிய பின்னரே அரசாங்கம் சமாதானத் தீர்வைக் கொண்டுவரும் என்றும்—

சமாதான முயற்சிகளில் மாற்றம் செய்வதோ சமாதான முயற்சிகளைக் கைவிடுவதோ அரசாங்கத்தின் நோக்கம் அல்ல என்றும் அவர் கூறினார்.

வடக்கு—கிழக்கு பகுதியில் பெரும் இராணுவ நெருக்குதலை எதிர்நோக்கியுள்ள விடுதலைப் புலிகள் தென்பகுதியில் சீர்குலைவை ஏற்படுத்துவதற்கு தற்போது எத்தனித்து வருகின்றனர்.

சர்வதேச சமூகத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு அபகீர்த்தியை உண்டுபண்ணுவதற்கான பிரசார இயக்கத்தையும் விடுதலைப் புலிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பாடசாலைகள் திறக்கப்பட்டதாலேயே தாக்குதல் பின்போடப்பட்டதாம்!

கொழும்பு, மார்ச் 30

வடபகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள திட்டமிடப்பட்டு தயாரிப்புக்களும் பூர்த்தியான நிலையில்தான் பாடசாலைகளைத் திறக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பாடசாலைகள் திறக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்ததை அடுத்தே வடபகுதி இராணுவ நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டது.

இப்படி கொழும்பு தமிழ் வாரப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

விரைவில் இரண்டாம் தவணை விடுமுறைகளுக்காக பாடசலைகள் மூடப்படவுள்ளன. அதன் பின் வடபகுதியில் பாரிய நடவடிக்கையை ஆரம்பிக்க தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-3]

அ. தி. மு. கவுடன் கூட்டு:

# தமிழக காங்கிரஸில் பிளவு ஏற்படும் நிலை!

சென்னை, மார்ச் 30

எதிர்வரும் தேர்தலில் தமிழகத்தில் அ. தி. மு. கவுடன் கூட்டணி வைப்பது என காங்கிரஸ் கட்சியின் புதுடில்லி தலைமைப்பீடம் எடுத்த முடிவால், தமிழக காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

தமிழக காங்கிரஸ் தலைமையகமான சென்னை சத்திய மூர்த்தி பவனில் நேற்று நடைபெற்ற முக்கிய கூட்டம் ஒன்றில் காங்கிரஸ் பிரமுகர்கள் பலரும் தலைமைப் பீடத்தின் இந்த முடிவை ஆட்சேபித்து காரசாரமாக உரையாற்றினர்.

தமிழக காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன், கருப்பையா மூப்பனார், மத்திய அமைச்சர்கள் ப. சிதம்பரம், அருணாசலம், தமிழக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் உட்பட பல எம். பிக்கள், எம். எல். ஏக்கள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

அ. தி. மு. கவுடன் கூட்டணி வைப்பதை ஏற்க முடியாது

[4 ஆம் பக்கம் பார்க்க)

## மழை பெய்யாவிடில் முழுநேர மின்வெட்டு

கொழும்பு, மார்ச் 30

மழை தொடர்ந்து பெய்யாதுவிட்டால் ஏப்ரல் மாத இறுதியில் முழுநேர மின்வெட்டை அமுலாக்க வேண்டிய நிர்ப்பந்தம் மின்சார சபைக்கு ஏற்படும் என மின்சார சபை பொறியியலாளர் வட்டாரங்கள் அமைச்சுக்கு தெரிவித்துள்ளன.

தற்போதைய கால நிலையை அவதானிக்கும் போது மே மாத பிற்பகுதியிலேயே மழை பெய்யும் சாத்தியம் உண்டு என்று வானிலை அவதான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மழைகால அறிகுறி தென்படவில்லையானால் தற்போது அமுலில் உள்ள 4 மணி நேர மின்வெட்டு அடுத்த சில தினங்களில் 6 மணி நேரமாக அதிகரிக்கப்படும் என்றும்—

நீர்த்தேக்கத்தில் நீர் மட்டம் குறைகிறது என்றும்—தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ஒரு தொகுதியில் 385 பேர் போட்டி

சென்னை, மார்ச் 30

தமிழக சட்டப் பேரவைக்கான தேர்தலில் மடக்குறிச்சி தேர்தல் தொகுதியில் மட்டும் இதுவரை 385 பேர் வேட்பு யிடுவதற்கு போட்டிமனுதாக்கல் செய்துள்ளனராம்.

இத்தொகுதியில் வாக்குச் சீட்டு சிலஅடிகள் நீளமுடையதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ-ரி)

## சுப்பர் டோரா கையளிப்பு

கொழும்பு மார்ச் 30

கொழும்பு டொக்யார்ட் லிமிட்டெட் நிறுவனத்தினால் கட்டப்பட்ட மூன்று அதிவேகத் தாக்குதல் ''சுப்பர் டோரா'' படகுகளில் ஒன்றை கடற்படையினர் கடந்த சனியன்று பொறுப்பேற்றனர்.

50 மைல் வேகத்தில் செல்லக் கூடிய இப்படகின் பெறுமதி 21 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப்படகுகளில் இரண்டு 20 எம். எம். துப்பாக்கிகள் பொருத்தப்பட்டு [illegible] றும் சிறிய ஆயுதங்களும் பொருத்தப்பட்டிருக்கின்றன.

# புலிகளின் தாக்குதலில் இரு பொலிஸார் பலி!

## மட்டக்களப்பில் நேற்று சம்பவம்

சாவகச்சேரி, மார்ச் 30

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய தாக்குதலில் இரண்டு ஸ்ரீலங்கா பொலீஸார் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு நகர்ப்புற நுழைவாயிலான பட்டிருப்புப் பாலத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தாக்குதலின் போது பொலிஸ்காரர்கள் இருவரும் படுகாயம் அடைந்தனர் என்றும் —

மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அவர்கள் மரணம் அடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த தாக்குதலுக்கு முன் மட்டக்களப்பில் புளியடி மடு என்ற இடத்திலும் ஸ்ரீலங்கா ராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி இருந்தனர். ராணுவத்துக்கு ஏற்பட்ட சேத விவரம் தெரியவரவில்லை.

வடக்கில் புதிய தாக்குதல் ஒன்றை ஆரம்பிப்பதற்கு படையினர் தயாராகிக் கொண்டிருக்கும் வேளையில் கிழக்கில் படையினர் மீது புலிகள் தமது தாக்குதல்களை அதிகரித்துள்ளனர் என்று ராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

(இ-ரி-7-6)

## வடமராட்சியை நோக்கி நேற்றும் ஷெல் தாக்குதல்

சாவகச்சேரி மார்ச் 30

நேற்று அதிகாலை சுமார் 1. 30 மணி முதல் 3. 00 மணிவரை இராணுவத்தால் வடமராட்சிப் பகுதியை நோக்கி தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

வல்லை, கெருடாவில், தொண்டமானாறு, வல்வெட்டித்துறைப் பகுதிகளில் வீழ்ந்துவெடித்த ஷெல்களால் அப்பகுதி மக்கள் இரவோடிரவாக இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றனர்.

அதேசமயம் வலிகாமம் பகுதியில் தொடர்ச்சியாக துப்பாக்கிச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன இராணுவத்தால் அடிக்கடி பரா வெளிச்சமும் பாய்ச்சப்பட்டது.

(இ-ரி-15-80-117-173)

## தீ விபத்தில் 77 பேர் மரணம்

இந்தோனேஷியாவின் போர்சர் நகரில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் 77 பேர் மரணமானார்கள்.

மூன்று மாடிகளைக் கொண்ட வர்த்தகத் தொகுதியில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது.

இறந்தவர்களில் பெரும்பாலானோர் வர்த்தகத் தொகுதியில் கடமையாற்றிய பெண்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-6]

## பிரதம தபாலகம் முற்றாக ஸ்தம்பிதம்

சாவகச்சேரி, மார்ச் 30

யாழ். பிரதம தபாலகம் நேற்று முதல் செயலிழந்ததால் அதன் பணிகள் யாவும் நேற்றுடன் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன.

பருத்தித்துறையிலிருந்து எடுத்து வரப்பட்ட 85 தபால் பொதிகள் தரம் பிரிக்கப்பட முடியாமல் அப்படியே தேங்கிக் கிடக்கின்றன.

தமக்குரிய தபால்களைப் பெற வந்தவர்களும், பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு தெரிவாகி 2 ஆம் படிவம் பெற வந்தவர்களும் வெறுங் கையுடன் திரும்பினர்.

சமய பாட ஆசிரியர் தெரிவுப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வந்தவர்களும் மற்றும் இதர கருமங்களை ஆற்ற வந்தவர்களும் பெரிதும் ஏமாற்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அலரிமாளிகை அருகில் ராணுவத்துடன் கைகலப்பு

### பொலீஸ்காரர் காயம்

கொழும்பு, மார்ச். 30

அலரிமாளிகைக்கு அருகில் வீதித் தடை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலீஸாருக்கும், அனுமதியின்றி அலரி மாளிகைக்குள் செல்ல முயன்ற இராணுவத்தினருக்கும் இடையில்நடந்தகைகலப்பில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்து கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றிச் கூறப்படுவதாவது:-

ஜனாதிபதியின் வாசஸ்தலமான அலரி மாளிகையின் பின் பக்கமாகவுள்ள டூப்ளிக் கேசன் வீதியில் வீதித்தடைகள் போடப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை நள்ளிரவு ஒரு மணியளவில் இந்த தடையை நோக்கி இரு வாகனங்களில் வந்த இராணுவத்தினரை மறிந்த இரு பொலீஸார் அடையாள அட்டையைக் கேட்டனர். அப்போது இரு தரப்புக்கும் இடையில் வாய்த் தர்க்கம் முற்றி கைகலப்பு ஏற்பட்டது.

இதில் காயமடைந்த குணவர்த்தனா என்ற பொலீஸார் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீதித்தடையை மோதி சென்ற வாகனத்தில் சென்ற இராணுவ லெப்டினன்ட் கைது செய்யப்பட்டு கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு எதிர்வரும் 4 ஆம் திகதி வரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

(இ-3)

# யாழ். மருத்துவபீட மாணவர்கள் உள்ளகப் பயிற்சிக்கு சேர்க்கப்படுவர்

கொழும்பு, மார்ச் 30

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் மருத்துவ உள்ளகப் பயிற்சிக்கான தகுதிகாண் பட்டியலில் இடம்பெறுவார்கள் என்று உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டது.

வடபகுதியில் பரீட்சை நடத்தப்படாமல் உள்ளக பயிற்சி நெறிக்கான பட்டியல் [illegible] தயாரிக்கப் [illegible] ஆட்சேபித்து யாழ் மருத்துவ பீட மாணவர்கள் தொடர்ந்த இந்த வழக்கு பிரதம நீதியரசர் ஜி. பி. எஸ். டி. சில்வா, குலதுங்க, பி. இராமநாதன் முன்னிலையில் நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஏற்கனவே கொழும்பு வந்து கடந்த வருட இறுதியில் பரீட்சை எழுதிய 6 மாணவர்கள் ஒரு மனுவையும்—

பரீட்சை எழுத முடியாது போன 9 மாணவர்கள் மற்றொரு மனுவையும் — தாக்கல் செய்திருந்தனர்.

இரு வழக்குகளும் ஒன்றாகச் சேர்த்தே விசாரிக்கப்படுகின்றன.

இந்த விவகாரத்தில் இணக்கம் காணும்வகையில் திறமை அடிப்படையில் அனைத்து பல்கலைக் கழகங்கள் உள்ளடங்கிய புதிய பட்டியலைத் தயாரிப்பதற்கென கடந்த 14 ஆம் திகதி பிரதிவாதிகள் தரப்பில் அவகாசம் கோரப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சுசுக்கி 125 (மண்ணெண்ணெய்க்கு மாற்றப்படாத நிலையில்) மோட்டார் சைக்கிள், கிற்றார், பழைய றலி சைக்கிள். தொடர்பு: ரி. கார்த்திகேசு, பங்களா றோட், மீசாலை மேற்கு, மீசாலை. [41129]

டெலிக்கா வான் ஒன்று விற்பனைக்குண்டு. (Mitsubishi 1400) மண்ணெண்ணெயில் இயங்கக்கூடிய நிலையில் உள்ளது. தொடர்பு: S. V. கோபாலகிருஷ்ணன் ('சேவையர்') மாதனை, பருத்தித்துறை. (41250)

நல்ல நிலையிலுள்ள National Radio Set, (Model No. Rx 5235), புதிய Filter Fryer (1100 Watt), Toaster Automatic (900 Watt) தொடர்பு: சங்கக்கடை வளவு, வறணி வீதி, வேம்பிராய். (41244)

### 96/97 எண்சோதிடம்

சண் மாஸ்ரரின் கணிப்பில் எண்சோதிடப் பலாபலன்கள் நூல் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். யாழ். ஆனந்த்ஸ், கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.] [41089

### தவறவிடப்பட்டுள்ளது

25-3-96 அன்று பூநகரி நல்லூர் இறங்குதுறையில் புத்தகங்களும் முக்கிய ஆவணங்களும் அடங்கிய உரப்பை ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்: ''ரதி அழகு சாதனப் பொருள் விற்பனை நிலையம்'' நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி. (41131)

### வெற்றுப் போத்தல்

வெற்று வெள்ளை சாராயப் போத்தல் (முழுப் போத்தல், அரைப் போத்தல்) கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: உணவு எண்ணெய்க் கம்பனி, யாழ். வீதி, புளியங்குளம். [41132]

### G. A. Q., B. A. புவியியல்

புவிவெளியுருவவியல், கால நிலையியல், புள்ளிவிவரப் படவரைகலை, பூமித்தாய் [சூழற்கல்வி] ஆகியன 25 சதவீதக் கழிவுடன் விற்பனையாகின்றன. கலாநிதி க. குணராசா, கமலாம்பிகை நூல் வெளியீட்டகம், 10 மகளிர் கல்லூரி வீதி, கற்குழி, சாவகச்சேரி. [41107]

### தையல் மெஷின் தேவை

நல்ல நிலையிலுள்ள சிங்கர் Zig Zag மற்றும் சாதாரண தையல் மெஷின்கள் நியாயமான விலைக்கு உடன் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: ஊஷா ஏக விநியோகஸ்தர், பஸ் நிலையம் அருகில், பருத்தித்துறை. [40394]

### வாங்கப்படும்

பாவித்த கொப்பி, புத்தகங்கள், சஞ்சிகைகள் கொள்வனவு செய்யப்படும். நிரோஜன் சிற்றுண்டியகம், பிரதான வீதி, பருத்தித்துறை. [41258]

### தவறிவிட்டது

க. பாலசிங்கத்தின் 393391405 V இலக்க அடையாள அட்டை மட்டுவில் - சாவகச்சேரிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். M. தம்பையா, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. [41261]

---

யாழ். நகரில் பிரபலமான

## BECON கல்வி நிறுவனம்

நெல்லியடியில் **MATHS CENTRE**
**3-4-96** முதல் ஆரம்பமாக உள்ளது.

A/L - **96, 97** மாணவர்கள் உங்கள் அனுமதியை **30-3-96**முதல் 10.00 A. M. — 2.00 P. M. வரை பெற்றுக்கொள்ளவும்

நிர்வாகி

(40396)

---

## A/L 97, 96, 96 மீட்டல்

ஆரம்பம்: **03-04-96** (3-00 மணி)

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | மகேந்திரன் |
| கணக்கியல் | — | வன்னியசிங்கம் |
| வர்த்தகம் | — | பசில் |
| அளவையியல் | — | R. P. சர்மா |
| புவியியல் | — | குணராசா |
| இந்து நாகரிகம், இந்து சமயம் | — | அருள்நங்கை |
| தமிழ் | — | குழந்தை |
| அரசியல் | — | கியூபேட் |
| வரலாறு | — | ஆனந்தராசா |
| நாடகமும் அரங்கியலும் | — | குழந்தை-சண்முகலிங்கம், குஷாந்தன் |
| கிறீஸ்தவம் | — | மல்லிகா |
| புள்ளி விபரவியல் | — | ராஜன் |

**SPOKEN ENGLISH**
With
**GRAMMAR**
by
Britto

## புதிய உயர் கல்லூரி

(அரசினர் வைத்தியசாலை முன்பாக)
விநாசித்தம்பி லேன், சாவகச்சேரி.

(சி-4148)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை

**1995|1996 கல்வியாண்டுக்கான**

## அனுமதிக் கடிதமும், பதிவு செய்தலும்

யாழ். பல்கலைக்கழகத்திற்கு 1995 / 96 கல்வியாண்டுக்குப் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களது அனுமதிக் கடிதங்களை க. பொ. த. (உயர் தரம்) பெறுபேற்றையும், தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்து, 01 - 04 - 1996 தொடக்கம் 15-04-1996 வரை யாழ். பல்கலைக்கழகத்தின் உப அலுவலகம், இந்துக்கல்லூரி, சாவகச்சேரியில் பெற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே பதிவுசெய்தோர் இவ் அனுமதிக்கடிதத்தைப் பெற்று திரும்பவும் தேர்வுக் கிளையில் ஒப்படைக்கும்படியும், இதுவரை பதிவு செய்யாதோர் பின்வரும் ஆவணங்களுடனும், பதிவு கட்டணத்துடன் 19-04-1996 க்கு முன் பதிவுசெய்யும்படியும் வேண்டப்படுகின்றனர்.

1. பல்கலைக்கழக அனுமதிக் கடிதம்
2. பிறப்புச் சான்றிதழ் (மூலப் பிரதியும், போட்டோப் பிரதியும்)
3. பாடசாலை விடுகைப்பத்திரம் ( .. .. )
4. 8 புகைப்படப் பிரதிகள்
5. **கட்டணங்கள்**

அ) கலை — ரூபா **175/-** (புவியியலை ஒரு பாடமாக எடுக்க விரும்புவோர் ரூபா **275/-**)

| | | | |
|---|---|---|---|
| ஆ) | முகாமைத்துவம் | — ரூபா | **175/-** |
| இ) | வர்த்தகம் | — ரூபா | **175/-** |
| ஈ) | விஞ்ஞானம் | — ரூபா | **305/-** |
| உ) | விவசாயம் | — ரூபா | **275/-** |
| ஊ) | மருத்துவம் | — ரூபா | **350/-** |

பதிவாளர்
(சி-1449)

---

## MASTER INSTITUTE

கரவெட்டி

**G A Q., B A.**

யாழ்ப்பாணம் / பேராதனை [வெளிவாரி] பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்கான, 95 ஆம் 96 ஆம் ஆண்டுக்கான விரிவுரைகள்.

யாழ். நகர் / வடமராட்சி சிறப்பு வாய்ந்த ஆசிரியர்களின் இணைந்த சேவையில்

ஆரம்பம்:- 06 - 04 - 96

நேரம்:- காலை 8. 30 மணி

அனுமதியும் விவரமும்:- கல்வி நிலையத்தில் 01-04-96 மாலை 4 மணியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(40398)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
**21 - 04 - 1914**



உதிர்வு:
**29 - 02 - 1996**

## திருமதி சிவரெத்தினம் மகேஸ்வரி

ஏழாலை

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான்''
அம்மா பாசமோடு உம்மை பல ஆண்டு வாழ
நேசமோடு உம்மை அணைத்து வந்தோம்
காலன் நாசமாகப் போட்டிட்ட கணக்கதனால்
இவ் உலக வாழ்வதனை மறந்திரே!
தந்தையை இழந்து நாம் இருக்கையிலே
தவிக்கவிட்டுச் சென்றீர்களே!
ஆறாத்துயர் ஆறாது அன்பான எம்குடும்பத்தில்
அன்பு கருணை பாசம் கொண்டு பண்புடன்
எம்மை வாழ வைத்தீர்களே அம்மா!
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத் துயில் சென்று விட்டீர்!
வாடுகின்றோம் சேயர் நாம்.

இன்று (30 - 03 - 1996)இல் எம் இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக் கிருத்திய வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னையின் பிரிவால் துயருறும்!
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சி. செல்வரத்தினம்,
சாரதா நகர் மாயவனூர்,
[illegible] (40487)

---

## JAFFNA SCIENCE ASSOCIATION FIFTH ANNUAL GENERAL MEETING

Notice is hear by given that the 5th Annual General Meeting of the Association will be held on Sunday the 28 th April 1996 at 9.30 a.m.
The venu will be notified later.

Agenda

1. Sectional Meeting to elect office bearers.
2. Adoption of statement of Accounts for 1995 / 96
3. Election of office bearers for 1996 / 97
4. Any other business.

Prof., K. CHITRAVADIVELU
General Secretary,
J. S. A.

1996 - 03 - 27

(41265)

---

## ஞானோதய அக்கடமி

கண்டி வீதி, சாவகச்சேரி.

## A/L 96, 97 கலை, வர்த்தகம்

எமது ஆசிரியர் குழு:-

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் |
| கணக்கியல் | — | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | — | திரு. பசில் |
| புள்ளி விவரவியல்:-, அளவையியல் | — | திரு. S. S. மனோகரன் |
| தமிழ் | — | திருமதி. அ. மீரா |
| இந்து நாகரிகம், இந்து சமயம் | — | திரு. பாலா |
| புவியியல் | — | திரு. வேலா |
| அரசியல் | — | திரு. பஞ்சு |

ஆரம்பம்:- **03 — 04 — 96**
(பி. ப. 3 மணி)

## ★ A/L 96 DAY CLASS ★

(A/L 95 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு)
ஆரம்பம்: **03 - 04 - 96**
(பி. ப 3 மணி)

குறிப்பு:- **02-04-96** முன்னர் உங்கள் அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

(41259)

---

யாழ்.

## கலை, வர்த்தக கல்லூரி C. C. A.

## A/L 96, 97, 96 மீட்டல்

ஆரம்பம்: **3 - 4 - 1996**
புதன்கிழமை பி. ப. 3-00 மணி

குறிப்பு:

பொருளியல் ஆசிரியர் திரு. கு. உதயன் அவர்களால் **96**ஆம் ஆண்டு மாணவர்களுக்கு புதன்கிழமை பி. ப. 3-00 மணிக்கும், **97**ஆம் ஆண்டு மாணவர்களுக்கு 4-00 மணிக்கும் மாணவர் நலன் கருதிய நேர அட்டவணை நிறுவனத்தில் வைத்து சமர்ப்பிக்கப்படும்.

— நிர்வாகம்

[41137]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

திருவாட்டி
**சிவபாக்கியம் - திலகராயர்**
''பாக்கிய இல்லம்'', 51, சந்தன மாதா வீதி, பாண்டியன் தாழ்வு, சுண்டுக்குளி.

தோற்றம்:
**10 - 02 - 1917**

மறைவு:
**11 - 04 - 1995**

திதி: 30 - 03 - 1996

கண்முன் நின்ற கடவுளே
பெண்ணாகி வந்தெமக்கு பேறளித்த தெய்வமே
அன்னை உன் அன்பை இழந்து
ஆண்டொன்று போனதோ
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

வி. திலகராயர் J. P., பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தற்போதைய முகவரி;-
மே/பா. மணிவண்ணன்,
''வெள்ளை மாளிகை'', கலாமன்றம்,
வல்லிபுரப் பரியாரியார் லேன்,
பருத்தித்துறை.

(40399)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இராணுவத்தின் அறிவிப்பு

குடாநாட்டின் மீது படையெடுப்பு ஒன்று மீண்டும் நடத்தப்படும் என்பதனை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்கா இந்த விடயத்தை வெளியிட்டிருக்கிறார். அதனை அவர் நேரடியாகச் சொல்லாமல் சூசகமாக, சுற்றிவளைத்துக் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் முகாம்கள், தளங்கள் மீது பலத்த ஆட்லறி எறிகணை வீச்சும், விமானக்குண்டு வீச்சும் நடத்தப்படும். எவ்வித முன்னறிவிப்பும் இன்றி எந்த நேரத்திலும் இத்தாக்குதல்கள் நடத்தப்படும்–

ஆகையால் அந்த இடங்களில் இருந்து தூரவிலகி இருந்து தங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது மக்களின் பொறுப்பாகும்—என்று பிரிகேடியர் சொன்னார்.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் போர் தொடங்கிய காலத்திலிருந்து, தான் புரியும் தமிழர் படுகொலைகளை, இன அழிப்பை நியாயப்படுத்துவதற்காக, இராணுவம் இந்த வாசகங்களை, வசனங்களைச் செப்பி வருகின்றது.

விடுதலைப் புலிகள் மக்களோடு மக்களாக நின்றுதான் இராணுவத்தினருடன் போராடுகிறார்கள். அவர்களுடைய முகாம்கள், தளங்கள் மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியிலேயே உள்ளன. இது இராணுவத்துக்கும் அரசுக்கும் நன்கு தெரிந்தவை.

விடுதலைப்புலிகளின் முகாம்கள், அலுவலகங்கள் மீது எறிகணை மற்றும் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்துவதாகக் கூறிக் கொண்டு பொதுமக்களின் குடியிருப்புகளைத் தாக்கி அவர்களைக் கொல்வதே படையினரின் இலக்கு.

படையினர் இவ்வாறு நடத்திய தாக்குதல்களில் பத்துப் பொதுமக்களுக்கு ஒரு புலிப் போராளி என்ற விகிதத்தில் கூட மரணங்கள் சம்பவிக்கவில்லை என்பதை இராணுவமும் நன்கு அறியும்.

ஆனால் அவர்களின் கணக்குக் காட்டுதலில் தமிழ்ப் பொதுமக்கள் எல்லோரும் புலிகளாக்கப்பட்டு விடுவது ஒன்றும் புதியதல்ல.

மேலும் படையினர் நடத்தும் தாக்குதலில் இருந்து தம்மைப் பாதுகாக்கும் பொறுப்பு பொதுமக்களுடையதே என்று சரத் முனசிங்கா கூறுவது கவனிக்கப்படவேண்டியது.

ஸ்ரீலங்கா அரசு தமிழர்களைத் தனது பிரசைகளாகக் கருதுமானால், அதன் இராணுவம் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும். ஆனால் இங்கே, இராணுத்தின் தாக்குதலில் இருந்து தங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு மக்களுடையது என்று இராணுவமே அறிவிக்கிறது!

அதாவது ஸ்ரீலங்கா இராணுவம் தமிழர்களின் எதிரி என்பதனை இராணுவ உயர் அதிகாரிகளே ஊர்ஜிதம் செய்கிறார்கள்.

வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் மிக நெருக்கமாக வாழ்கிறார்கள். இதனை ஒரு சந்தர்ப்பமாக்கி தமிழர்களைப் பெரும் எண்ணிக்கையில் கொன்றொழிக்க புறப்பட்டுவிட்டது அரசு. அதனை நியாயப்படுத்தவும், கணக்குக் காட்டவும் இப்படி ஓர் அறிவிப்பு!

# அரசின் தீர்வுத்திட்ட யோசனையை ஆதரிப்போருக்கு கொலை மிரட்டல்!

## 'இரத்தப் புடையன்' என்ற அமைப்பு அனுப்பியுள்ளதாம்

கொழும்பு, மார்ச் 30

அரசின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைக்கு ஆதரவு வழங்கும் தென்னிலங்கை அரசியல்வாதிகளையும், பிக்குமாரையும் படுகொலை செய்யப் போவதாக 'இரத்தப் புடையன்'' என்ற ஒரு அமைப்பு கடிதம் அனுப்பியுள்ளது.

தென் மாகாண சபை தகவல் அமைச்சர் டெனி ஹித்தட்டியகே இத்தகவலை வெளியிட்டார்.

தென்மாகாண சபையின் மாதாந்தக் கூட்டம் புதனன்று நடைபெற்ற சமயமே அவர் இத்தகவலைத் தெரித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது

''இரத்தப் புடையன்'' அமைப்பின் கடிதம் எனக்கு கிடைத்தது போன்று முதல்வர் மகிந்த யாப்பா அபயவர்த்தனா, போக்குவரத்து அமைச்சர் ஐ. விஜயவந்த ஆகியோருக்கும் கிடைத்தது.

இதே போன்ற கடிதங்கள் இன்னும் எத்தனை பேருக்கு வந்துள்ளதோ தெரியாது. நான் இத்தகவலை கூறும் போது பலர் நகைத்தார்கள். இதனை வெறும் இலேசான விடயமாக கருதக்கூடாது. இது பாரதூரமான விடயம்.

முன்னர் ஓர் இயக்கம் இவ்வாறான கடிதங்களை அனுப்பியபோது பலர் பரிகசித்தனர். அவர்கள் இன்று உயிருடன் இல்லை. இன்னும் பயங்கரவாதம் முற்றாக ஒழிந்ததாக இல்லை.

மாகாண சபை உறுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு போதாது. உறுப்பினர்களிடம் ஆயுதம் இல்லை. அதேவேளை பாதுகாப்புக்குத் தரப்பட்ட பொலீஸார் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டு விட்டனர்

இன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு மாகாண சபை உறுப்பினர்களுக்கு இல்லை — என்றார்.

''இந்தக் கடிதத்தில் உள்ள விடயத்தை உதாசீனம் செய்யக்கூடாது'' — என்று எதிர்கட்சித் தலைவர் எம். எஸ். அமரசிறி தெரிவித்தார்.

(உ-3)

## யாழ். இந்து மாணவருக்கு

சாவகச்சேரி, மார்ச் 30

1994ஆம் ஆண்டுக்குரிய புலமைப் பரிசில் பணத்தைப் பெற்றுக் கொள்ளாத யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்கள் அனைவரையும் எதிர்வரும் திங்கள் செவ்வாய்க்கிழமைகளில் முற்பகல் வேளையில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இயங்கும் தமது கல்லூரி அலுவலகத்துக்கு வந்து அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் திரு. இ. மகேந்திரன் கேட்டுள்ளார்.

[உ]

## நிதித்துறை அறிவித்தல்
## வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை காச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு 30.03.96, 31.03.96 ஆகிய திகதிகளில் காலை 10.00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை கோரியுள்ளது,

★ செல்லப்பா இராசரத்தினம் — சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.

★ பொன்னுத்துரை தயாபரன் — செட்டிக்குறிச்சி, பண்டத்தரிப்பு.

★ வள்ளியம்மை கந்தையா — செருக்கப்புல் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு.

★ பிலிப்புப்பிள்ளை மரியதாஸ் — கீரிமலை றோட், பண்டத்தரிப்பு

★ மஞ்சுளா தேவராஜா — 6, கதிரவேல் லேன், அரியாலை.

★ ஜெகதீஸ்வரி லிங்கரெத்தினம் — கந்தையா வாத்தியார் வீதி, கந்தரோடை தெற்கு.

★ சின்னத்தம்பி கந்தசாமி — சுழிபுரம் தெற்கு.

★ கந்தையா இராசதுரை — '' கண்ணன் ஸ்ரோர்ஸ்'', புத்தூர் கிழக்கு.

★ ராஜேந்திரம் — வி. எச். லேன், கோப்பாய் தெற்கு, இருபாலை.

★ அருளம்மா மருசிலின் அல்லது அல்பின் அம்மா — 23, சென்பற்றிக்ஸ் வீதி, றெக்கிளமேசன், குருநகர்.

★ நாகர்- ராமலிங்கம் ஜே. பி. — 28, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு.

★ குமாரசாமி சிவசுந்தரம் — பொன்னாலை, சுழிபுரம்.

★ இராசம்மா அழகர்சாமி — 9/2, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம்.

★ சின்னத்தம்பி சிவராசா — 131/1, கண்டி வீதி, கச்சேரி, யாழ்ப்பாணம்.

★ சிவமலர் கனகராசா — அரியாலை கிழக்கு.

★ வி. சின்னத்துரை — பிரதான வீதி, அச்சுவேலி தெற்கு.

★ க. கனகசபாதி ஐயர் — நீர்வேலி கந்தசாமி கோயில்க்கரை (View).

★ தம்பிஐயா சதாசிவம் (திலகவதி) — மே/பா, நடேசபிள்ளை, நுணாவில் மேற்கு.

★ பசுபதி மகேந்திரம் அல்லது விமலாதேவி முத்துலிங்கம் — ஔவை தெற்கு, மயிலங்காடு.

★ கந்தையா இராசரெத்தினம் — ஏழாலை வடக்கு.

★ மல்லிகா சிவசுப்பிரமணியம் — விஜயராசா, துரையப்பா வீதி, தெல்லிப்பளை கிழக்கு.

★ க. சு. குணசிங்கம் — நீர்வேலி மேற்கு.

★ இராசம்மா தம்பிராசா — கலைவாணி வீதி, சித்தங்கேணி.

### யாழ். மருத்துவபீட

## செய்முறை பரீட்சை குறித்து ஆலோசிக்கப்படுமாம்

### கூட்டணியிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 30

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் இறுதி ஆண்டு செய்முறைப் பரீட்சையை மந்திகையில் நடத்துவது குறித்து ஆலோசிப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக்குழுவினர் ஜனாதிபதியைச் சந்தித்து வடபகுதி அகதிகள் பிரச்சினை உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதித்தனர்.

இறுதி ஆண்டு செய்முறைப் பரீட்சையை மந்திகையில் நடத்தும்படி தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக்குழுவினர் கோரியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு பதில் அளித்தார்.

செய்முறைப் பரீட்சையை நடத்துவதற்குத் தேவையான வைத்திய நிபுணர்கள் கொழும்பில் இருந்து இங்கு வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்து வருவது தெரிந்ததே.

(இ-7)

## மலாயன் ஓய்வூதியம்

சாவகச்சேரி, மார்ச் 30

மலாயன், சிங்கப்பூர் ஓய்வூதியம் பெறுபவர்களுக்காய் மார்ச் மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும், காசோலைகளும் அந்த அந்த வங்கிகளுக்கு யாழ். செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்கள் தமக்குரிய ஓய்வூதியத்தை தமது வங்கிகளுடன் தொடர்பு கொண்டு இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

[இ-ரி]

# 10 ஆயிரம் படையினரைத் திரட்டுவது இன அழிப்பு நடவடிக்கைக்கே

### கிளிநொச்சிக் கூட்டத்தில் பாலகுமாரன்

கிளிநொச்சி, மார்ச் 30

தமிழின அழிப்பு நடவடிக்கை ஒன்றுக்கு சிங்கள அரசு தன்னைத் தயார் செய்து வருகிறது. இந்த இன அழிப்பு நடவடிக்கைக்கென பத்தாயிரம் படையினர் மேலும் திரட்டப்படுகின்றனர். சிங்கள தேசம் எடுக்கப்போகும் இந்தப் போர் ஒரு இறுதிப் போராக அமையப்போகிறது

கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் விடுதலைப் புலிகள் அரசியல் துறை உறுப்பினர் திரு. வே. பாலகுமாரன் மேற்கண்டவாறு கூறினார்.

வர்த்தகப் பெருமக்கள், வர்த்தக ஊழியர்கள், அரச திணைக்கள அதிகாரிகள், ஊழியர்கள், பொது மக்கள் பெரும் எண்ணிக்கையில் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

திரு. பாலகுமாரன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:—

சந்திரிகா அரசு தமிழ் மக்கள் மேல் ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையை இன்னும் சில தினங்களில் கட்டவிழ்த்து விடவுள்ளது. இது ஒரு பாரிய இன அழிப்பு நடவடிக்கையாகவே அமையப் போகிறது. இப்பாரிய இன அழிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டியது தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரினதும் கடமை ஆகும்.

வடமராட்சி, தென்மராட்சி மட்டுமல்லாது, கிளிநொச்சியிலிருந்து வவுனியா வரை தரை வழிப்பாதை ஒன்றைத் திறக்க சிங்கள அரசு தன்னைத் தயார் செய்து வருகிறது. இந்நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ளும் பொருட்டு ''7 ஆம் வகுப்புப் படித்தவர்கள் உடுப்புகளுடன் வாருங்கள். இராணுவப் பயிற்சிக்கு'' என்று சிங்கள அரசு அழைக்கிறது.

தமிழர் அனைவரும் புலிகள் என சந்திரிகா அரசு கூறுகிறது. இதனால் இனி நடைபெறப்போகும் போர் ஓர் இன அழிப்புப் போராகவே அமையப்போகிறது. நாம் அனைவரும் அபாயத்தை உணரவேண்டும். அபாயம் வருவதற்கு முன் எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நாங்கள் வாழ விரும்புகிறோம். வாழ்வதற்காகவே இந்தப் போராட்டம் நடைபெறுகிறது.

இச்சந்தர்ப்பத்தில் நாம் எல்லோரும் இணைந்து ஒரு பெரிய படையணியை உருவாக்கி இதைத் தடுக்காது போனால் அனைவரும் எதிரியிடம் கைகட்டி நிற்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்படுவதைத் தடுக்க முடியாது. நாம் தன்மானத்துடன் வாழவேண்டுமானால் நாம் போராடவேண்டும் இப்படி அவர் கூறினார்,

(இ-124)

## நினைவுக்கல் நடுதல்

இம்மாதம் 16ஆம் திகதி மணலாறு மாவட்டம், சாம்பன்குளம் ஸ்ரீலங்காஇராணுவ முகாம் அழிக்கப்பட்டபோது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மூவரில் ஒருவரான கப்டன் உலகநம்பி அவர்களுடைய திருவுருவப் படம் இன்று 30 ஆம் திகதி 3 மணியளவில் அவரது தற்போதைய இல்லமான மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தடியில் இருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் சந்திரபுரம் அ.த.க. பாடசாலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

போராளிகள், பொதுமக்கள் ஆகியோரின் இறுதி வீரவணக்கத்திற்காக திருவுருவப்படம் வைக்கப்பட்டு, மாலை 4 மணியளவில் அங்கு நடைபெறும் இறுதி வீரவணக்கக் கூட்டம் நிறைவுற அங்கிருந்து மீண்டும் அணிவகுப்பு மரியாதைகளுடன் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் அம்மாவீரரின் நினைவுக்கல் நடப்படும்.

இவ்வாறு மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக காங்கி--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்று அங்கு தெரிவித்த கருப்பையா மூப்பனார் பொருத்தமான நடவடிக்கை குறித்து முடிவு செய்வதற்கு இன்று வரை கால அவகாசம் கோரினார்.

அ. தி. மு.கவுடன் கூட்டணி வைக்கும் முடிவை தமிழக காங்கிரஸ் அடியோடு ஏற்காது என்றே நேற்றைய கூட்டத்துக்குப் பின்னர் பரவலாக நம்பப்பட்டது.

ஆனால் நேற்று மாலை தமிழக காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் விடுத்த அறிக்கை ஒன்றில், கட்சியின் கட்டுப்பாடு கருதி கூட்டணி பற்றிய கட்சித் தலைமையின் முடிவை தமிழக காங்கிரஸ் ஏற்றுச் செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கை தமிழக காங்கிரஸ் தலைவர்களிடையே பிளவு ஏற்பட்டிருப்பதைக் காட்டுவதாக அவதானிகள் கருத்து வெளியிட்டனர். [உ.-ரி-7]


உ
சிவமயம்

கரவெட்டி கிழக்கு
ஸ்ரீ யார்க்கரு விநாயகர் ஆலயம்
ஏழாம் திருவிழா
விஞ்ஞாபனம்

இன்று சனிக்கிழமை காலை, மாலை நிகழ்ச்சிகள்:

மங்கள இசை:- வே. சீவரத்தினம் குழுவினர்
என். கே. பத்மநாதன் குழுவினர்
வி. ரி. உதயசங்கர் குழுவினர்
கே.ஆர். சுந்தரமூர்த்தி குழுவினர்.
சொற்பொழிவு:- மாலை 5 மணி - ஆறு திருமுருகன்
விடயம்:- ''விநாயகர் மகத்துவம்''
வயலின் இசை:- ஆர். இராதாகிருஷ்ணன் குழுவினர்
வில்லிசை:- ''கலாவிநோதன்''
சின்னமணி குழுவினர்.

மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட முத்துச் சப்பரத்தில் விநாயகப் பெருமான் வீதி வலம் வந்து அருட்காட்சி அளிப்பார்.

ஏழாம் திருவிழா உபயகாரர்
தெருத்தனை, யார்க்கரு,
கரவெட்டி.
(சி/4152)


## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை வல்லிபுரம்

அளவெட்டியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட க. வல்லிபுரம் கடந்த ஐப்பசி மாதம் அளவெட்டியில் காலமானார்.

அன்னார் யோகம்மாவின் (முல்லைத்தீவு) பாசமிகு கணவரும், ரோஜினி, கேதீஸ்வரன், திலகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தகோபால், சுபாசினி, சுகந்தமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும், [illegible]ங்கரன், யநந்தினி, கிசாந் ஆகியோரின் அன்பு [illegible]ரனுமாவார்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்
வ. யோகம்மா
(மனைவி)
கும்பிளாவலை பிள்ளையார் கோவில் அருகில்
நுணச்சி,
அளவெட்டி

த/ விலாசம்:-
மே/பா. வை. சந்திராதேவி,
பூதவிராயர் ஒழுங்கை,
பருத்தித்துறை.

(41267)

திருமதி
### சிவகுருநாதன் பொன்னம்மா

யாழ்/ கந்தர்மடம் அரசடி வீதியைச் சேர்ந்த திருமதி சிவகுருநாதன் பொன்னம்மா நேற்று 29-3-96 இல் சங்கத்தானையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கம் சிவகுருநாதரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகாதேவா, திருமதி விஜயலட்சுமி, சிவசுப்பிரமணியம் (உதவித் தபால் அதிபர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அற்புதமங்கயர்க்கரசி, சுகானந்தா, புஷ்பலோசனி ஆகியோரின் அன்பு மாமியாரும், மனோரஞ்சிதம், சசிகலா. சசிகுமார், ரகுராமகிருஷ்ணன், ஜெயராமன், பிரபாகர், பாஸ்கர், சிறீதர் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி பின் ஒழுங்கையில் உள்ள பொ. சுப்பிரமணியம் (தபாலதிபர்) இல்லத்தில் இன்று 30 - 03 - 96 11 மணியளவில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சிவசுப்பிரமணியம்
(மகன்)

தற்போதைய முகவரி:
சாவ/ இந்துக்கல்லூரி பின் ஒழுங்கை,
சங்கத்தானை.
சாவகச்சேரி.

(41141)

## மகளிர் அபி. நிலைய கருத்தரங்கு

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஏழாவது கருத்தரங்கு தொடரும், ஜீவாகாரம் வழங்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை மீசாலை கிழக்கு, மீசாலையில் இடம்பெறும்.

மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவசந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் மகளிருக்கான போசாக்கு சம்பந்தமான விடயங்களும், சுயதொழில் வேலை வாய்ப்புக்கள் பற்றிய திட்டங்களும் ஆராயப்படவுள்ளன.

அத்துடன் இடம்பெயர்ந்து மேற்படி இடத்தில் வசிக்கும் சுமார் 75 குடும்பங்களுக்கு ஜீவாகாரமும் வழங்கப்படவுள்ளது. (இ)

## ஓய்வூதியர் பொதுக்கூட்டம்

சாவகச்சேரி, மார்ச் 30

வடமாநில ஓய்வூதியர்கள் சங்கங்களின் சம்மேளனத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கரவெட்டி திரு இருதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இணைந்த சங்கங்களின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-7)

### பிரதம...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்தனர்.

இதேவேளை மேற்படி பிரதம தபாலகத்தை எங்கு இயங்கவைப்பது என்பது குறித்து நேற்று நண்பகல் வரை முடிவாகவில்லை. [இ-7]

### வடக்கில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீவிரப்படுத்தியுள்ளனர்.

எவ்வாறாயினும் உலக நாடுகள் இந்த சூழ்ச்சியினால் ஏமாந்து விடமாட்டா என்றும் அவர் கூறினார்.

பாதுகாப்பு நிதிக்கு அன்பளிப்புக்களைப் பெற்றுக் கொண்ட வைபவம் ஒன்றிலேயே அவர் மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டார். (இ-3)

### யாழ். மருத்துவ--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது, பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான அரச சட்டத்தரணி கோவித தர்மவர்த்தன—

உள்ளகப் பயிற்சிக்கான தகுதிகாண் பட்டியலில் யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் சேர்க்கப்படுவர் என்று தெரிவித்தார்.

இதே வேளை—

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்கள் விவகாரம் தொடர்பாக நீதிமன்றம் எடுக்கும் முடிவுகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகளை எடுக்க தாம் தயாராக இருப்பதாக சுகாதார அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்தார். (அ-3)


புவியியல்
A/L 96-96 மீட்டல்
97
வகுப்புகள்
திரு. R. நித்தி
ஆரம்பம்: 03 - 04 - 96
புதன் பி. ப. 3 மணி
கலைமகள்
கல்வி நிலையம்
[illegible]
கோவிலடி, மீசாலை.
(41138)


## தந்தை செல்வாவின் நினைவு நிகழ்வுகள் நாளை

பருத்தித்துறை, மார்ச் 30

தந்தை செல்வாவின் 99 ஆவது பிறந்த நாளையொட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை இரண்டு அஞ்சலி நிகழ்வுகள் பருத்தித்துறையில் நடைபெற உள்ளன.

நாளை காலை 10 மணியளவில் பருத்தித்துறை சிவன் கோவிலில் விசேட அபிஷேகம், பூசை, பிரார்த்தனை என்பன நடைபெறும்.

இங்கு தந்தை செல்வாவின் உருவப்படம் வைக்கப்பட்டு மக்கள் மலரஞ்சலி செய்வர்.

நாளை மாலை 4.30 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை தேவாலயத்தில் தந்தை செல்வாவின் வாழ்விற்கு இறைவனுக்கு நன்றி செலுத்தும் ஆராதனை நடைபெறும். யாழ். ஐக்கிய கிறிஸ்தவ சங்கம் இந்த ஆராதனைக்கு ஏற்பாடு செய்துள்ளது.

தந்தை செல்வா, யாழ். புனித யோவான் கல்லூரியில் மாணவனாகப் பயின்று வந்த காலத்தில், அவர் வழிபாடு செய்து வந்த சுண்டிக்குளி புனித யோவான் ஸ்நானகர் தேவாலயத்திலேயே வழமையாக இந்த ஆராதனை நடைபெற்று வந்தது.

வலிகாமம் மக்களின் இடம்பெயர்வு காரணமாக இம்முறை ஆராதனை பருத்தித்துறை மெதடிஸ்த தேவாலயத்தில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (அ)


யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியம்

1996- 03- 31 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு தந்தை செல்வா (S. J. V. செல்வநாயகம்) அவர்களின் 99 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அவரின் வாழ்விற்காக நன்றி செலுத்தும் ஆராதனை பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை ஆலயத்தில் நடைபெறும். யாவரும் அன்பாய் அழைக்கப்படுகிறீர்கள்.

செயலாளர்,
வண. S. மில்ரன்.
யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்.
(41266)


## 31-ம் நாள் நினைவலைகள்

செல்வி
### ஏஞ்சலின் கம்ஸத்வனி ஜெயநேசன்

உதயம்: 16 - 11 - 1992
அஸ்தமனம்: 29 - 02 - 1996

ஏஞ்சல் நீ எமை பிரிந்து
இன்றுடன் முப்பத்தொரு நாள்கள் ஆகின்றன
உனது அப்பா, அம்மா தினம் கதறுகிறார்கள்
ஆசையாய் ஆரபி உனை தேடியழுகிறாள்
நீ நெடுந் தூரம் சென்றதேன் செல்லம்?
ஆசை மாமன் தான் உனை அழைத்து சென்று
விட்டானோ?
நாம் தேடிச்சென்று தேற்ற முடிய வில்லையே
நெடுந்தீவகத்திலுள்ள உமது பெற்றாரை
நிலா காட்டி அன்னமூட்ட அம்மம்மா
ஆசையாய் தேடி அலைகிறாள்
உன் மழலைப் புன்னகையில் மலர்ந்த
வதனங்கள் தினம் வாடுகின்றன.
உன்னை ஏந்திய கரங்கள் ஏங்குகின்றன.
நீ உன் 'சிவாத் தம்பியை' ஓமந்தை வரை
அழைத்து சென்று கையசைத்து — உன்
இறுதிப்பயணம் சொல்லவா? — செல்லம்
உனக்கு வந்த விதியை அப்பொழுது புரியவில்லையே!
உன் பிரிவினால் தான் இன்று வலிகாமமே
சோகத்தினால் வாடிக்கிடக்கிறதோ?
ஏஞ்சல் செல்லம், பாவிகள் நாம் பாரினில் வாடுகின்றோம்
பரிசுத்தவான்களுடன் நீ பாசமாக தூங்கம்மா.
உன் ஆத்மா சாந்தி பெற இறைவனை ஆராதிக்
கின்றோம்.

இ. சிவநாதன்
கொடிகாமம்.

பழைய முகவரி:-
62/5 செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(41268)

## மரண அறிவித்தல்

திருமதி
### இளையபிள்ளை - மயில்வாகனம்

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், மட்டுவில் சிவன் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட இளையபிள்ளை மயில்வாகனம் (29 - 3 - 96) நேற்றுக் காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை—மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், குணரத்தினம் (இளைப்பாறிய தபாலதிபர்), காலஞ்சென்ற நல்லையா, கனகலிங்கம், சிவலிங்கம் (U. K.) ஆகியோரின் அருமைத் தாயாரும், யோகராணி, லலிதாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியாரும், கேதீசன் (சுவிஸ்), பாமா, விவேகானந்தன், விஜயானந்தன், குகானந்தன், இந்துஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (30-3-96) மாலை 3 மணியளவில் நடைபெறும். என்பதை உற்றார் உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
ம. கனகலிங்கம்
(மகன்)

மே/பா. சி. பொன்னுத்துரை,
சிவன் கோவிலடி,
மட்டுவில்.

(41269)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 30-03-96 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org